## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதிகாரசபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப்

பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது அதிகாரசபையினது பணிப்பாளர் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க அதிகாரசபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுத் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுதல், தொடர்புடைய அறிக்கையிடல் நியாயங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டை மேற்கொள்ளுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டை நிகழ்வில் உள்ள சொத்துக்களுடன் சாதாரண காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் தொடர்பாக முறையான நடவடிக்கை மேற்கொள்ளல் என்பவற்றிற்கான நியாயமான உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கான போதியளவு ''சிறந்தவாறு திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுவது அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 55 ஆம் பந்தியன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதயில் ரூபா 8,949,317 ஆன மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பில் அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துகளின் தேய்மானப் பெறுமதி மற்றும் பயன்பாடு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், முழுமையாக தேய்விடப்பட்டிருந்த ரூபா 34,610,524 கிரயமான சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்து கணக்குகளைச் சீராக்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | 2020 திசெம்பர் 31 திகதியிலான மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் 2008 ஆம் அண்டு நிலையான சொத்துக்களை மறு கணக்கீடு செய்யப்பட்டதன் கின்னர் மன் கொணரப்பட்ட மீதி என்பதுடன் நடப்பு அண்டில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் மாறுதல்கள் மேற்கொள்ளப்படவில்லை. என்பதனால் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை. 2021 ஆம் அண்டில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் தொடக்கம் புதிய கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ப்பட்டும் அதிகார சபையில் பயன்படுத்தப்படும் அனைத்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் அரச மதிப்பீட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், அந்த அறிக்கை கிடைத்தல் தொடர்ந்தும் தாமதமாகி உள்ளது. 2021 ஆம் ஆண்டில் வாகன மதிப்பீட்டு அறிக்கை மட்டும் கிடைக்கப்ப பெற்றுள்ளதுடன் அதற்கமைய 2021 ஆம் அண்டின் மோட்டார் வாகன சொத்தப் பிரிவிற்கு புதிய மதிப்பீட்டுப் பெறுமதியை உள்ளடக்க முடியம். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையவாறு கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையிால் மற்றும் அதிகாரசபைக்கு எதிராக தொடர்ப்பட்ட 39 வழங்குகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 105 மற்றும் 108 ஆம் பந்திகளுக்கமைய இறவிடப்பட வேண்டிய நிகழத்தக்க பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில் லை | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வழங்களும் குத்தகை வீட்டு உரிமைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் தலைமை முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் கட்டளையினை செயற்படுத்தாமை தொடர்பிலாகும். அதிகார சபையின் கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதி மன்றத்திலேயே வழக்குத் தொடுக்க முடியும் என்பதனால் அவை கட்டளையினைப் பெற்றுக் கொள்வதற்கான வழக்காகும். அவ்வாறான நிலைமையின் கீழ் அதிகார சபையினாலும் மற்றும் அதிகார சபைக்கு எதிராகவும் தொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பில் எதிர்பார பொறுப்புக்கள் இல்லை. | நியமங்களினது ஏற்பாடுகளுக்கு ஏற்புடையாதானவாறு இருத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ப்பட்ட ரூபா 950,880 செலவானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் அருவச் சொத்தாக கணக்கிடப்படாது கணனிச் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானத்திற்கு | 2021 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு அருவச் சொத்துக்களுக்கு நிதி நிலைமைக் கூற்றில் வேறான செலவினைத் தலைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள் ளமையால், 2021 ஆம் ஆண்டு முதல் இந்தத் தவறு திருத்தப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தவறு 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக | நியமத்தினது ஏற்பாடுகளுக்கு அமைவாக அருவச் சொத்துக்களை வேறாக அறிந்து கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| எதிராகப் பதிவழித்துள்ளமையை மீளாய்வாண்டில் திருத்தப்படவில்லை. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| "நகமு புரவர" வேலைத் திட்டத்திற்காகத் திறைசேரியிலிருந்து மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்து ரூபா 1,144,729 நீண்ட காலப் பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு பதிலாக 05 ஆண்டுகளுக்கும் அதிகமான காலமாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | அதிகார சபையின் போது முகாமையாளர்களினால் நியமிக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட குழுவின் தகவல்கள் சேகரித்து, இந்த தொகையில் ரூபா 559,268 பொது அபிவிருத்தி மற்றும் கட்டுமாண சட்டவாக்க கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டியது என கண்டறியப்பட்டுள்ளது. மீதித் தொகை தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையுடன் பணிப்பாளர் சபைக்குக் காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுத் தீர்மானம் செய்வதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய மீதி தாமதமின்றி சீராக்கல் செய்யப்படுவதற்கு மற்றும் சரியாகக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றின்மை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | களஞ்சியப் பொருட்களின் நிகர ஆதாய மதிப்பு | 1,584,997 | கணக்கீடு செய்யப்பட்ட முறைமை தொடர்பான விபரம் | 2020 ஆம் ஆண்டின் தொகை மதிப்பீட்டிற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் தொலைபேசி அழைப்பின் மூலம் விசாரணை செய்யப்பட்டு சந்தைப் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் இருந்து எழுத்து மூலம் சந்தைப் | இருப்புச் செலவினை நிர்மாணிப்பதற்கு உரிய எழுத்து மூல சான்றினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெறுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | முன்னைய ஆண்டு சீராக்கல் கணக்கிற்கு சீராக்கப்பட்ட கடனைத் தீர்க்கும் விபரம் | 1,386,534 | முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கிற்கான சீராக்கல் விபரம் | CMA/06/01/256 கோவையில் இங்கு குறிப்பிடப்பட்டுள் ள கடன்பட்டோர் மீதி தொடர்பிலான முழுமையான விபரங்கள் அடங்கியுள்ளன. அந்த சேவையினை கணக்காய்விற்கு இதனுடன் சமர்ப்பிக்கின்றே ன். | உரிய நாளேட்டுக் குறிப்பு பணவுறுதி பத்திரத்துடன் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பஹா மற்றும் நீர்கொழும்பு மருத்துவமனைகளின் நீர் பாய்ச்சும் நிலையங்களின் பராமரிப்புக்காக 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறப்பட வேண்டிய மீதி ரூபா 7,393,054 ஆன உள்ளதுடன் அதிகார சபையின் விடயப் பரப்பினுள் இல்லாத இந்த செயலினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது கடன்பட்டோராக கணக்கிடப்பட்டிருந்தது.<br>அவ்வாறே, 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 12,899,599 ஆன கடன்பட்டோர் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்பட்ட கடன்பட்டோர் 12 பேரிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி ரூபா 7,370,329 ஆக உள்ளதுடன் அது மொத்த கடன்பட்டோரில் 57 | கம்பஹா மருத்துவமனையின் நீர் பாய்ச்சும் நிலையங்களின் பராமரிப்பிற்குரிய தொகை தாமதமாகியமெனினும் கிடைக்கப் பெற்றுள்ளது. 2009 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கம்பஹா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட விலைப்பட்டியல் விடயப் பொறுப்பு எழுதுவினைஞரிடமிருந்து காணாமல் போயிருந்தால், அந்த விலைப்பட்டியலின் பெறுமதியான ரூபா 1.1 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது. அது தொடர்பில் சேவைகளைப் பரீட்சித்துப் பார்த்து எதிர்காலத்தில் உடனடியாக பதிலினைப் | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபபட வேண்டியதுடன் சொத்துக்கள் சரியாக வகை பிரிக்கப்பட்டு கணக்கிலிடப்படல் வேண்டும். |

சதவீதமாகும்.

பெற்றுக் கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பு மருத்துவ மனையில் இருந்து பெற வேண்டியுள்ள நிலுவைத் தொகை தொடர்பில் எதிர்ாகலத்தில் கலந்துரையாடலினை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சமப்படுத்தலொன்றுக்காக பெற வேண்டிய நிலுவைத் தொகை மீதியான ரூபா 2,529,698 தொகையினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான அனுமதியினைப் பெறுவதற்கு அமைச்சின் செயலாளர் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. ஜல்தர வீடமைப்பு முறைமையின் கழிவு நீர் கட்டமைப்பின் நிலுவை மின்சாரம் பட்டியலைச் செலுத்துவதற்குக் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையால் செலுத்தப்பட்ட தொகையினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் ஜல்தர வீடமைப்பு முறைமையின் கூட்டு முகாமைத்துவ கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்படடுள்ளது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலும் தற்காலிகக் கூட்டு ஆதன உறுதிப்பத்திரம் வழங்கையில் இறுதி கூட்டு ஆதன உறுதிப் பத்திரங்கள் இன்னமும் கூட்டு ஆதன முகாமைத்தவ அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகையினை கடனபட்டோராக கணக்கிடப்பட்டமையால்

இந்தக் கடன்பட்டோர் உருவாகி உள்ளனர். அது தொடர்பில் பணிப்பாளர் சபை தெளிவுபடுத்தப்பட்டு முறையான அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கூறிய கடன்பட்டோர் மீதிகளை நீக்குவதற்கு உடன்படிக்கை எடுக்கப்படும்.

**1.7 சட்டங்கள், விதிகள, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பந்தியின் (ஏ) பிரிவு | கூட்டு ஆதனச் சொத்துக்களின் பொது வசதிகள் பராமரிப்பை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தல் அதிகார சபையின் நோக்குமாயினும் மாளிகாவத்தை மாற்று ஜல்தர வீடமைப்பும் திட்டங்களின் பொது வசதிகள் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கவில்லை. | 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பொது வசதிகள் (திருத்தம்) அதிகாரச சட்டததின் 5 ஆம் பந்தியின் (எ) பிாவிற்கமைய கூட்டு ஆதன சொத்துக்களின் பொது வசதிகளைப் முகாமைத்துவக் கூட்டு தாபனங்கள் தவறுமாயின் மற்றும் அந்நதத் நேரடியாக தலையீடு செய்வதற்கு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பந்தியின் (ஏ) பிரிவிற்கமைய அவ்வாறான கூட்டு ஆதன சொத்து உள்ளூராட்சி நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் நோக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாளிகாவத்தை அல்லது ஜல்தர வீடமைப்பு முறைமைகளிலிருந்து அவ்வாறான விண்ணப்பங்கள் இது வரையிலும் மேற்கொள்ளப்பட்டதால் அதிகார சபை இது தொடர்பில் நடவடிக்கை | இந்த அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கவில்லை. | |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் | (i) ரூபா 25,000 இற்கு கூடிய தொகையினை விடுவிக்கையில் ரூபா 25 இற்கான முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் கொடுப்பனவு பணவுறுதி பத்திரங்களை பரீட்சிக்கையில் ரூபா 1,092,341 பெறுமதியான 16 கொடுப்பனவிற்குரிய முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுக்காக ரூபா 25 இற்கான முத்திரைக் கட்டணம அறவிடுதாறு பணவுறுதி பத்திரம் தயாரிக்கும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த அதிகாரச் சட்டத்தின் சட்டங்கள் விதிகளுக்கு இணங்கி முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| | | (ii) அதிகார சபையில் ரூபா 789,800 பெறுமதியான பேரிடம் கடன் தொகை வழங்கப்பட்ட 16 சந்தர்ப்பங்களில் கடிதம் பரிமாற்றங்களில் பயன்படுத்தப்பட் முத்திரைகள் மீளவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இரத்துச் செய்யப்பட்ட முத்திரை பயன்படுத்திய அனைத்து ஊழியர்களிடம் மற்றும் காசோலை வழங்கிய முகாமைத்துவ உதவியாளர்களிடம் காரணங்களை விசாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அவர்கள் கண்டிக்கப்பட்டு இதன் பின்னர் இவ்வாறான காரியங்கள் செய்யாதிருக்க அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த அதிகாரச் சட்டத்தின் சட்டங்கள் விதிகளுக்கு இணங்கி முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>---------------------------------------- | | | |
| | (i) II ஆம் அத்தியாயத்தின் 1.10.1 மற்றும் அதிகார சபையின் | பிரசித்த அறிவித்தலை வெளியிட்டு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பணிப்பாளர் சபையிடம் பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று | குறித்த சட்டங்கள் விதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையவாறு ஆட்சேர்ப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு நடைமுறையின் 8.3 ஆம் பந்தி. | உதவிப் பொது முகாமையாளர் (நிதி) நுகர்வுச்சேவை உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய மூன்று பதவிகளுக்குமான உத்தியோகத்தர்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் 05 பதவிகளுக்காக 14 ஊழியர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். தாபன விதிக் கோவையின் 1:10:1 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க உரிய அனுமதிகள் பெறப்படாது அதிகார சபையின் தலைவரினால் 2019 ஆம் ஆண்டில் மேற்கூறிய உதவிப் பொது முகாமையாளரின் (நிதி) பதவி 2013 ஆம் ஆண்டு வரையிலும் முன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆரம்ப கட்ட பரீட்சிப்பினை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டள்ளது டன் உரிய அறிக்கை தலைவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அந்த அறிக்யினைக் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செய்யப்படல் வேண்டும். |
| (II) | II ஆவது தொகுதியின் XLVIII ஆவது அத்தியாயத்தின் 13:1 ஆம் பந்தி மற்றும் 13:2 ஆம் பந்தி | ஏதேனும் துர்நடத்தை தொடர்பிலான நடவடிக்கைக்கு ஆரம்ப விசாரணைகளை நடாத்த கட்டளையிடப்படும் அதிகாரியினால் அந்தந்த நடவடிக்கையின் சுபாவத்தினைக் கருத்திற் கொண்டு ஆரம்ப விசாரணையை எவ்வளவு காலத்தனுள் முடிவுறுத்த வேண்டும். எனினும் மீளாய்வாண்டினுள் அதிகாரசபையின் 07 உத்தியோத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. துர்நடத்தை தொடர்பில் தங்களால் கண்டறிந்து கொள்ளப்பட்ட காரணிகள் தொடர்பில் தாமதமின்றி தமது அவதானிப்பு மற்றும் பரிந்துரை சமர்ப்பதில் | ஆரம்ப விசாரனையினை நடாத்துவதற்கான கட்டளை இருக்கையில் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களுக் குரிய ஆரம்ப விசாரணை கூடியளவு முடிவுறுத்த வேலை என்பதனைக் குறிப்பிட்டு நியமணக் கடிதம் வழங்கப்படுள்ளது. ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களுக் கு ஒப்படைக்கப்பட்டள்ள வேறு விசாரணை நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு கடமைப் பொறுப்புகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்களின து கூற்றினைக் பெற்றுக் கொண்டதன் பின்னர் உடனடியாக இறுதி அறிக்கையினை வழங்குவதற்கு | குறித்த சட்டங்கள் விதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையதால் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர் குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய ஆரம்ப பணிகள் எனினும் மீளாய்வாண்டில் இடம் பெற்ற 05 சம்பவங்கள் தொடர்பில் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அவதானிப்பு மற்றும் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முடியாதிருந்தது. எதிர் காலத்தில் ஆரம்ப விசாரணை பரீட்சிப்பு மேற்கொள்வதற்கு குறித்த ஆரம்ப விசாரணையின் சுபாவத்திற்கமைய அறிகையினை வழங்குவதற்கான கால எல்லையினைத் தீர்மானமாக நிச்சசயித்து நியமனக் கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (I) | நிதிப் பிரமாணம் 218 | ஒரே கொடுப்பனவு தொடர்பில் இரு தடவைகள் பணம் செலுத்தப்படுதலைக் தவிர்ப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதிகார சபையின் விலைப்பட்டியல் தீத்தலுக்காக ரூபா 2,298,748 இற்கான கொடுப்பனவு பணவுறுதிபத்திரத்துடன் பிரதி விலைப்பட்டியல் இணைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படும் ஏடுகளில் மூல பிரதியினை உரிய கொடுப்பனவு பணவுறுதிப்பத்திரத்துடன் இணைப்பதற்கு உரிய விடயப் பொறுப்பு முகாமைத்துவ உதவியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | குறித்த பிரமாணங்களுக்கு ஏற்புடையதாக உள்ளக கட்டுப்பாடு உறுதியாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (II) | நிதிப் பிரமாணம் 231 | இயலுமான அளவில் வேறு ஏடுகளைப் பாராது சரி பிழை பார்க்கக் கூடிய வகையில் முழுமையான விபரங்கள் பணவுறுதிப் பத்திரத்தில் அடங்கி இருக்க வேண்டிய போதிலும் மாதிரிப் பரீட்சிப்பின் போது ரூபா 60,101,890 இற்கான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பணவுறுதிப் | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் வகைப் பட்டியலின் மூலம் 12 ஆவது உரிய கொடுப்பனவு பணவுறுதி பத்திரத்துடன் இணைப்பதற்கும் ஆதனப் பற்றி பணவுறுதி பத்திர முகப்பில் குறிப்பிடுமாறு உரிய விடயம் பொறப்பு முகாமைத்துவ | குறித்த பிரமாணங்களுக்கு ஏற்புடையதுமாறு கொடுப்பனவுகளுக்கு உரியதாகப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பத்திரத்துடன் சமாப்பபிகப்பட்டிருக்கவில்லை. | உதவியாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (III) | நிதிப் பிரமாணம் 502(2) | அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 96,409,808 இற்கான சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் பொது 287 மாதிரியில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. வருடாந்தம் சேரும் சொத்துக்களுக்காக பதிவேட்டினை பேணியிருந்த போதிலும், அது ஒழுங்காக இற்றைப்பட்டிருக்காததுடன் வருடாந்த கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய மீளாய்வாண்டின் தேய்மானம் கணிப்பிடும் போது ரூபா 177,578 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் பொது 287 படிவத்திற்கமைய நிலையான சொத்து ஏட்டினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து சொத்துப் பிரிவு தொடர்பில் சரியான தேய்மானத்தை 2021 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டில் தேய்மான கணக்கீட்டு மாறுபாடு 2021 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய நோக்கலின் கீழ் திருத்தம் செய்யப்படும். | சொத்துக்களின் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில் சொத்துக்கள் பதிவேட்டினை பேணிச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (IV) | நிதிப் பிரமாணம் 757(2) | பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல் ஏதேனும் ஏற்படுமாயின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அவை தொடர்பில் செயற்பட வேண்டிய போதிலும் அதிகார சபையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட பொருட் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட ரூபா 425,221 பெறுமதியான 12 உருப்படி சொத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு விசாரணை மேற்கொண்டு அறிக்கையினை சமர்பித்தப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறித்த பிரமாணங்களின் பிரகாரம் பொருட் பற்றாக்குறை தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(உ) 2015 ஜூலை 14 அம் உப கட்டுநிதி வழங்கிய 2020 மார்ச் மாதம் முற்பணம் மூலம்

| | | | |
|---|---|---|---|
| திகதியிலான 03/2015 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | பின்னர் உரிய செயல் நிறைவேற்றப்பட்டு 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியை கணக்குப் பிரிவில் மீண்டும் தீர்க்கப்பட்ட வேண்டிய போதிலும் அதிகார சபையில் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 315,500 இற்கான கட்டுநிதி 16 நாட்கள் தொடக்கம் 115 நாட்கள் வரையில் தாமதித்த பின்னர் தீர்க்கபட்டிருந்தது. | தொடக்கம் யூன் மாதம் வரையில் நாடு முழுவதும் பரவியிருந்த COVID - 19 தொற்று நோய் காரணியாக தடைகாப்பு ஊரடங்கு பிரகடணப்படுத்தப்பட்டமையால் அலுவலகம் மூடப்பட்டிருந்தால் இந்த கட்டு நிதியைக் தீர்ப்பதற்குத் தாமதமாகி உள்ளது எவ்வாறு இருப்பினும் விசேட முற்பணம் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் முற்பணத் தொகையினைப் பெற்றுக்கொண்டு 10 நாட்கள் கடந்த போது அவர்கள் வாய்மொழி மூலம் தெளிவுபடுத்தப்பட்டு சம்பளத்தில் இருந்து அறவிடப்படுதல் மேற்கொள்ளப்படும். | கொடுப்பனவு செய்தல் முயைாக மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஊ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 6.5.1 ஆம் பந்தி மற்றும் 6.5.3 | நிர்வாகக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வரைபு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிககப்பட வேண்டுமாயினும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான கணக்காய்வு அறிக்கை உள்ளிட்ட ஆண்டறிக்கை பாளுமன்றத்தில் முன் வைக்கப்படவில்லை. | வரைபு ஆண்டறிக்கை 2021 மார்ச் 31 ஆம் திகதி அரச கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கபட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவை அலுவலகம் ஊடாக குறித்த ஆண்டறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு | அமைச்சுடன் இணைந்து ஆண்டறிக்கை குறிக்கப்பட்ட காலத்தினுள் பாராளுமன்றத்தில் முன் வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறே நிதிக் கூற்றும் குறித்த திகதியில் கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரச கூட்டுத்தாபனமொன்றின் மிகை நிதி, அழைப்பு வைப்பு, குறுகிய கால வைப்பு, திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள் அல்லது வேறு ஏதேனும் வைப்பில் இடுவதற்கு நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்யப்பட வேண்டும் என்றாலும், அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் ரூபா 181,171,713 ஆன முதலீடு செய்யப்பட்ட எட்டு வெவ்வேறு வைப்புத் தொகைகளுக்கு உரிய அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிலத்தை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக இந்த நிதிகள் குறுகிய கால வைப்புத் தொகையாகத் தக்கவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிதியமைச்சரிடம் தெரிவித்து, ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய முதலீடுகள் தொடர்பில் நிதியமைச்சரின் சம்மதம் மற்றும் திறைசேரியின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2016 மார்ச் 03 ஆம் திகதிய இலக்கம் 2/1/13/332 கொண்ட வீடமைப்பு மற்றும் நிர்மாணம் அமைச்சு செயலாளரின் கடிதம். | குறித்த கடிதத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனவும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைக்கு இணங்க ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்த போதிலும் அமைச்சின் செயலாளரின் அனுமதியினைக் கருத்தில் கொள்ளாது உதவி பொது முகாமையாளர் (மனிதவள) பதவிக்கு 2016 பெப்ரவரி 25 ஆந் திகதி ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு 2017 நவம்பர் 27 ஆந் திகதி தொடக்கம் 03 வருட தகுதி காண் காலத்திற்கமையவும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | அப்போதைய நிறுவனத்தின் நியமன அதிகாரி தலைவர் என்பதால் அந்தச் சந்தர்ப்பத்தில் நிலவிய உதவிப் பொது முகாமையாளர் (மனித வள) வெற்றிடத்தின் தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு அப்போது பதில் கடமையாற்றிய பொது முகாமையாளரின் பரிந்துரையின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அமைச்சின் கட்டளை மற்றும் ஏனைய சட்ட விதிகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் | 2018 ஆம் நிதியாண்டின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் ரூபா 47 | பத்தரமுல்ல பிரதேசத்தை மையமாகக் கொண்டு | குறித்த சட்டங்கள், விதிகள் |

| | | | |
|---|---|---|---|
| இலக்கம் PE/1/CMA/4/11(i) கொண்ட 2019 செப்டம்பர் 09 ஆம் திகதியான கடிதம் | மில்லியனும் (33 1/3 சதவீதம்) மற்றும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 33 1/3 சதவீதம் வருமான வரியான திறைசேரிக்கு பரிமாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியொன்றை கொள்வனவு செய்து அதிகாரசபைக்கான அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நிதி தேவையாக உள்ளது. கூட்டு அதன் முகாமைத்துவ அதிகார சபை நாளாந்த செலவிற்கு திறைசேரி நிதி கிடைக்காததால் வருடாந்தம் ஈட்டும் இலாபத்தினை இதற்காக ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளது. அவ்வாறு இருப்பினும் இதற்காக நிதி அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | என்பவற்றுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,000,000 இற்கான முதலீட்டு வருமானம் நிதியத்திற்கு கிடைக்கவில்லை. | 2021 சனவரி 21 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பங்கு விற்பனை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய பங்கு விற்பனைக்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கமைய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் தலைவருக்கு பதில் கடிதம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்குப் பிரதியிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இலாப | முதலீடுகளுக்கான பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பங்குகள் தொடர்பில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் நட்ட நிலைமையில் காணப்பட்டதனால் இலாபம் வழங்குவதற்கு முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 32,963,656 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 18,186,738 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேற்றில் ரூபா 14,776,918 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 14,191,566 இனால் அதிகரித்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 1,898,229 இனால் வீழ்ச்சியடைந்தமையும் முக்கியமான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் கட்டிட வளாகத்திற்காக வருடாந்தம் ரூபா 4,460,772 படியாக வாடகை செலவினம் மற்றும் வருடாந்த பராமரிப்பு செலவினம் முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,593,220 மற்றும் ரூபா 1,434,114 வீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மாதாந்த குத்தகைக் கூலி ரூபா 404,055 தொடக்கம் ரூபா 700,000 வரையில் அதிகரித்தலும் 2020 சனவரி தொடக்கம் நிலுவைத் தொகையினை ஒரே தடவையில் செலுத்துமாறு குறிப்பிடப்பட்டது. அதன் பிரகாரம், அதிகரிக்கப்பட்ட மாதாந்த குத்தகை வாடகையான ரூபா 700,000 இனை செலுத்துவதங்கு 4ட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை இணங்கிய போதிழலும், 2020 சனவரி முதல் ரூபா 7.7 ஆன நிலுவைத் | அதிகார சபை வேறாக சட்ட ரீதியான நபர்களைக் கொண்ட நிறுவனம் என்பதனால் அதிகார சபையின் பெயரில் உடன்படிக்கையினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகையினை ஒரே தடவையில் செலுத்துவது சிக்கல் நிறைந்த நிலைமை என்பதுடன் மற்றும் அது தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதனால் உடன்படிக்கை கைச்சாத்திட தாமதமாகியுள்ளது. மேலும், திருத்த வேலைகளுக்கு செலவிடப்பட்ட தொகையினை மாதாந்த வாடகையில் அறவிடுவதற்கு அனுமதியினை வேண்டி பிரதமருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கான பதில் கிடைத்துள்ளது.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த சில வருடங்களில் இலக்காகக் கொண்ட தினங்களுடன் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் இது தொடர்பில் எதுவிதமான முன்னேற்றத்தினையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 16 ஆந் திகதி சட்ட வரைபு வழங்கல் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய புதிய அமைச்சரவையினால் இதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய அனுமதி பெற்றுக் | 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் 1973 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க குத்தகை வீட்டு உரிமை அதிகாரச் சட்டத்திற்குரிய திருத்தங்கள் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையினால் 2017 யூன் 30 ஆந் திகதி சட்ட வரைபு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உரிய திருத்தங்களை உள்ளடக்கி சட்ட வரைபு திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த அடிப்படை வரைபிற்கு உரியதாக மீளவும் திருத்தப்பட வேண்டிய காரணிகள் தொடர்பில் சட்ட வரைபு | திட்டமிடப்பட்ட இலக்குகளை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திடம் மீளவும் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. 2019 திசெம்பர் 16 ஆந் திகதி சட்ட வரைபு திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இந்தத் திருத்தம், நியமிக்கப்பட்ட புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆகும். அதற்கமைய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப இந்தத் திருத்தம் மீளவும் கவனத்தில் கொள்ளுவதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவைத் துணைக் குழுவினால் 2020 நவம்பர் 10 ஆந் திகதி பரிந்துரை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய மேற்கூறிய அதிகாரச் சட்டங்களுக்குரிய திருத்தங்களை மீளப் பரிசீலனை செய்வதற்காக சார்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த சார்ப்புக் குழுவிற்கான குழு அங்கத்தவர்கள் இதுவரையிலும் பெயரிடப்பட்டுள்ளதுடன், அந்தக் குழு எதிர்காலத்தில் கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,890,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று மீளாய்வாண்டில் அதே பெறுமதிக:கு காப்புறுதி | பிரதிப் பொது நிதி முகாமையாளரினால் மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்கு உரிய காலப்பகுதியினுள் அனுமதியினைப் பெற்றுக் | முகாமைத்துவம் மற்றும் பாவனை உரிய சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு தொடக்கம் பிரதிப் பொது முகாமையாளருக்கு (நிதி) இணைக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதம் வரையிலும் 16 விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் 02 சந்தர்ப்பங்களில் மட்டும் நிதிப்பிரமாணம் 104(3) மற்றம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 13 விபத்துக்களுக்காக ரூபா 1,682,160 இற்கான காப்புறுதி பெறப்பட்டிருந்த போதிலும் அந்தத் தகவல்கள் உரிய கோவைகளில் உள்ளடக்கப்படவில்லை. குறித்த உத்தியோகத்தரினால் இந்த வாகனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | கொண்டிருக்காததுடன் தற்போது அதிகாரசபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களினால் செலுத்துவதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் என்பதனை மேலதிகமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | மேலே குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனம் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் பொலிஸ் அறிக்கை, தொழில்நுட்பக் அறிக்கை இல்லாது அதிகார சபையினால் திருத்த வேலை தொடர்பில் நடாத்தப்பட்ட உள்ளக நிர்வாக ஒழுங்கமைப்பினை மீறி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதிகார சபைக்கு ரூபா 570,295 இற்கான விலைப் பட்டியலும், காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 251,350 விலைப்பட்டியல் கட்டணமாக ஒன்றுக்கொன்று வேறுபட்ட பெறுமதியினைக் கொண்ட விலைப்பட்டியல் திருத்த | விபத்து தொடர்பான ஆரம்ப பரீட்சிப்பின் பின்னர் (நிதிப் பிரமாணம் 104) முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கு இணங்க பெற்றுக் கொடுக்கப்படும் கட்டளைக்கமைய நடவடிக்கை எடுக்கின்றேன். இந்த வாகனத்தை கராஜில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது. | வாகன ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் பாவனை உரிய சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

வேலைகளை செய்த தனியார் கராஜினால் வழங்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நட்டஈட்டுத் தொகை ரூபா 144,019 மட்டுமே ஆகும். திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளதாக 2019 திசெம்பர் 23 ஆந் திகதி காரஜினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வாகனத்தை அதிகார சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2019 திசெம்பர் 19 ஆந் திகதி அதிகார சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் பொலிஸ் அறிக்கை பெறப்பட்டிருந்த போதிலும் அது லொக் குறிப்பு ஏட்டில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. ஓட்டுனரினால் குறிப்பிடப்பட்டிருந்த வகையில் அவ்வாறான விபத்தொன்று ஏற்பட்டது என்பதனைக் காப்புறுதி நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்காததுடன் ரூபா 2,764,012 இற்கான திருத்த வேலை மதிப்பீட்டிற்காக ரூபா 500,000 இற்கான இழப்பீட்டினை மட்டுமே வழங்க காப்புறுதி நிறுவனம் உடன்பட்டிருந்தது. இந்த வாகனம் 2020 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2021 யூன் 30 ஆம் திகதி வரையிலும் மோட்டார் வாகனம் பிரதிநிதி நிறுவனத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் எதுவிதமான திருத்த வேலைகளும்

குறித்த மோட்டார் வாகனம் பிரதிப் பொது முகாமையாளருக்கு (ஒழுங்குபடுத்தல்) பதிற்கடமை இணைக்கப்பட்டள்ள அல்லது உள்வருதல் பாதுகாப்பு பிரிவினரால் குறித்துக் கொள்ளப்படாததுடன் அவர்களுக்கு அமைச்சின் அனுமதியுடன் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்த மோட்டார் வாகனம் பதிற் கடமை பிரதிப் பொது முகாமையாளரினால் (ஒழுங்குபடுத்தல்) உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனமன்றி அவருக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனமாகும். மேலும் இந்த கடமையினைப் பெற்றுக் கொண்ட எழுத்து மூல அனுமதி அல்லது வெளியேறுதலுக்கான குறிப்பு அல்லது

வாகன ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் பாவனை உரிய சட்ட விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கான எழுத்து மூல அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகார சபையில் கடமையில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதியிலான பீஈடீ 12 ஆம் இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவு செலவு குறித்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி, உரிய அமைச்சு மற்றும் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு செலவுக்கு மட்டுமே நிர்வாக சபையின் அங்கீகாரம் குறித்த ஆண்டின் இறுதியில் அதாவது 2020 நவம்பர் மாதம் 23 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் அரை இறுதியில் அரசியல் அதிகாரம் மாற்றமடைந்த காரணத்தினால் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினை நியமித்தல் தாமதடைந்ததால் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவு மீளாய்வாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி, அமைச்சு மற்றும்கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. எவ்வாறு இருப்பினும் பணிப்பாளர் சபையின் முன் அனுமதியின் கீழ் 2020 சனவரி 22 ஆந் திகதி 2020 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவு திட்டம் மேற்கூறிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2020 நவம்பர் 23 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கே ஆகும். | முறையான வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் பாதீட்டினை உரிய முறையில் அங்கீகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |